| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MSSRF<br>Science for Sustainable Development | மாவட்டம் : | தேனி | காலம் : | 13/04/2022 | முதல் | 17/04/2022 |
| | அறிக்கை எண் : | 029/ 2022 | வெளியீட்டு நாள் : | 12/04/2022 | | |

## தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35° - 38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24° - 26° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (08.04.2022 முதல் 11.04.2022) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 17-04-2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 08/04 | 09/04 | 10/04 | 11/04 | தேதி | நாள்-1<br>13/04 | நாள்-2<br>14/04 | நாள்-3<br>15/04 | நாள்-4<br>16/04 | நாள்-5<br>17/04 |
| 2.4 | 11.6 | 33.8 | 0.1 | மழை (மி.மீ) | 15 | 12 | 8 | 4 | 6 |
| 38 | 35 | 37 | 36 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 33 | 33 | 35 | 35 | 35 |
| 26 | 25 | 24 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 23 | 24 | 25 | 25 | 25 |
| 6 | 6 | 7 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 5 | 4 | 4 |
| 82 | 77 | 68 | 81 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 75 | 75 | 75 | 75 | 75 |
| 77 | 72 | 88 | 95 | | 60 | 60 | 60 | 60 | 60 |
| 6 | 8 | 4 | 1 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 6 | 6 | 6 | 6 | 6 |
| தென் கிழக்கு கு | கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | **காற்றின் திசை** | தென்மே மேற்கு | தென்மே மேற்கு | தென்மே மேற்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஏப்ரல் 13, 14, 15 தேதி மிதமான மழையும், 16, 17 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 33°-35° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 23° - 25° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 கி.மீ வேகத்தில், தென்மேற்கு மற்றும் தென்கிழக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## கனமழை எச்சரிக்கை:

தென்தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் ஏப்ரல் 13 தேதி கனமழை முதல் மிக கனமழையும் மற்றும் 14, 15 தேதி கனமழையும் பெய்வதற்கான வாய்ப்புள்ளது.

## இடி மின்னல் எச்சரிக்கை:

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் ஏப்ரல் 13 முதல் 15 தேதி வரை இடி மின்னலுக்கான வாய்ப்பு உள்ளது. வயல்களில் ஆடுகளை கிடை அமர்த்துதல் மற்றும் மேய்ச்சலின் போது போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். இந்த காலகட்டத்தில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியே அனுப்பாமல், மின்கம்பம்மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பா க கிகொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள்.

## எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்

## முக்கிய பயிர்கள் : மல்லிகை, முருங்கை, கால்நடை

### மல்லிகை:

*தற்போது நிலவும் சூழ்நிலையில் மல்லிகை வகைப் பயிர்களில் கழுத்தழுகல் மற்றும் வேரழுகல் நோய் பரவலாக தென்படுகின்றது. இதன் தாக்குதல் தாவரங்களின் எல்லா நிலைகளிலும் காணப்படும் வாய்புள்ளது. தாக்குதலின் முதல் அறிகுறியாக முதிர்ந்த இலைகள் மஞ்சள் நிறமாக மாறும். பின்பு இளம் இலைகள் மஞ்சளாகும். இறுதியில் தாவரம் இறந்துவிடும். வேரில் கறுப்பு நிற மாற்றத்தை காண முடியும். இதன் தாக்குலைக் கட்டுப்படுத்த அதிக அளவிலான எருவுடன் டிரைக்கோடெர்மா விரிடி கலந்து வைக்கவும்.*

### முருங்கை:

தற்போது நிலவும் சூழ்நிலையை பயன்படுத்தி முருங்கையில் நல்ல விளைச்சல் பெற செடி ஒன்றுக்கு 45 கிராம் தழைச்சத்து 16 கிராம் மணிச்சத்து, 30 கிராம் சாம்பல் சத்து ஆகியவற்றை விதைத்த மூன்றாவது மாதத்தில் இட்டு நீர் பாய்ச்சவேண்டும். மேலும் ஆறாவது மாதத்தில் தழைச்சத்து மட்டும் ஒரு செடிக்கு 45 கிராம் என்ற அளவில் இடவேண்டும்.

கடந்த சில நாட்களாக, ஒரு சில இடங்களில் கோடை மழை பெய்துள்ளது. அடுத்த சில நாட்களுக்கும் மழை எதிர்பார்க்கப்படுவதால், விவசாயிகள் தங்கள் நிலத்தில் கோடை உழவுப் பணியினை மேற்கொண்டு மழை நீர் வீணாகாமல் நிலத்தினுள் சேமிப்பதோடு, மண்ணில் மறைந்துள்ள பூச்சிகளின் முட்டைகள் மற்றும் கூட்டுப்புழுக்களை நிலத்தின் மேற்பரப்பிற்கு கொண்டுவந்து சூரிய ஒளியின் மூலம் அழிக்கலாம்.

### கால்நடை:

தற்போது சிறிதளவு கோடைமழை பெய்துள்ள நிலையில் வைக்கோல் மற்றும் மக்காச்சோளம் போன்ற தீவன பொருட்களில் பூஞ்சாணத் தாக்குதல் குறித்து கண்காணித்து வெயிலில் நன்கு உலர வைத்த பின்பு கால்நடைகளுக்கு கொடுப்பதன் மூலம் அப்ளாடாக்ஸின் என்ற நச்சின் தாக்கத்திலிருந்து தங்களது கால்நடைகளை பாதுகாக்கலாம்.